காவியம்

ஆசிரியர்: சுரதா

(கவிதை வார இதழ்)

சுவடி 1 : ஏடு 15 | சென்னை : திருவள்ளுவராண்டு, 1987, பங்குனி 3 16—3—56 | விலை அணா 1

மதுரத் தமிழ் காக்கும்



மயிலை சிவமுத்து

★

எளியநடை : எளியஉடை; எளிய வாழ்க்கை ;
எப்போதும் தமிழ்மொழியை வளர்க்குந் தொண்டு;
வெளிநடிப்பை, விளம்பரத்தை, விரும்பா உள்ளம்;
வித்தைக்கு முத்து ; இவர் மயிலை முத்து.
பிளவுதனை உண்டாக்கும் சாதி பேதப்
பிரிவினையை எதிர்க்கின்ற வடலூர்வள்ளல்,
விளக்கேற்றி வைத்துவரும் பெரியார் ; கல்வி
விழிப்புதனை உண்டாக்கும் பாண்டி வேந்தன் !

நெருப்புக்குப் புகைஉண்டு; ஆனால் விண்ணில்
நீந்துகின்ற கதிருக்குப் புகையேன் இல்லை?
இரவினிலே தாமரைப்பூ தூங்கு வானேன்?
இலைப்பந்தல் போடுகின்ற மரங்கள் யாவும்,
தரைமீது நடக்காமல் நின்று கொண்டே
தவிப்பானேன் எப்போதும்? என்று பிஞ்சுப்
பருவத்தில் தன்தந்தை இடத்தில் கேட்டுப்
பகுத்தறிவுத் திறமைதனை வளர்த்த மேதை!

மாண்புடைய மூவேந்தர் சிறப்பு மிக்க
வரலாற்றை உரைக்காமல், வடக்கு நாட்டுப்
பாண்டவரின் பெருமைதனைப் பற்றிப் பேசும்
பண்டிதர்கள் என்பவர்கள், இந்த நாட்டின்
தூண்மனிதர் ; சுணையற்ற தமிழர்—என்று
சொல்லுதற்கு அஞ்சாத புலவர் ! இங்கு,
ஆண்டவனைக் கருங்கல்லில் பாரீர் என்னும்,
ஆரியத்தின் சூழ்ச்சிதனை வீழ்த்தும் ஆசான் !

விழிக்காக, எழில்காத்துக் கொண்டி ருக்கும்;
விதைக்காக, வயல்காத்துக் கொண்டி ருக்கும்;
இழைக்காகத், தறிகாத்துக் கொண்டி ருக்கும் ;
இசைக்காக, செவிகாத்துக் கொண்டி ருக்கும்;
மழைக்காகப், பயிர்காத்துக் கொண்டி ருக்கும் ;
வாடாத சான்றோரின் வழியில் வந்த
பிழையில்லாப் பேரறிஞர் இவர்சொல் கேட்கப்
பெரும்புலவர் தினந்தோறும் காத்தி ருப்பர் !

சாவா மருந்து

தேடிய கீர்த்திக் கரவையில் வேலன் சிலம்பிற்குழை
சாடிய வேல்விழி மானே மதியைத் தலைவன்செங்கை
கூடிய மாந்தளி ரம்புபட் டோடிக் குலைந்துவெரீஇ
ஓடிய மான்புகுந் தன்றோ குரங்கியென் றோதுவதே!

—கரவை வேலன் கோவை.

விதையினிடம் எவரும் அழகை எதிர்பார்ப்பதில்லை.

இதயம்

சென்னை 16—3—56 வெள்ளி

நாடாளும் அமைச்சரின் "நாற்பது நிமிடங்கள்"

ஆவடி மாநாட்டில் ஐந்தே நிமிடம்
பேசி முடித்த பெருமகன்—லயோலா
கல்லூரி தன்னில்—கனம்காம ராசர்
நாற்பது நிமிடம் நாக்கு நடுங்காது
பேசி முடித்தாராம்! ஏசி முடித்தாராம்!
பயிலும் நாட்களில் பள்ளி மாணவர்கள்
அரசியல் கருத்தினை அறியலாம்; ஆனால்,
கட்சி அரசியல் பூசலில் மட்டும்,
தலையிடல் நிச்சயம் தகாது தகாது!
அமைச்சரின் இதழ்களில் அவிழ்ந்த சொற்களிவை!

கதிரவனைக் கரத்தால் மறைத்துப் பார்க்கிறார்!

பிப்ரவரி இருபதில் செய்தபொது வேலை
நிறுத்தம் வெற்றி பெற்றதா என்று
அறிவுரை வழங்கும் அந்த மன்றத்தில்,
அர்த்தாலைக் குறித்து நையாண்டி செய்துளார்,
ஒத்து ஊதும் மித்திரன்; தினமணி
அத்தனை ஏடுகள் அளித்த செய்தியை
அமைச்சர் வாசிக்க வில்லையா? அல்லது
மந்திரிக்கு ஞாபக மறதி அதிகமா?
இந்த அர்த்தால் எதற்கு என்றால்
காங்கிரஸ் ஆட்சியைக் கட்டோடு எதிர்க்கவே!

'பதவி நாற்காலி' என்கிறார் - - - - - பரிகாசம் செய்கிறார்!

கூட்டு முயற்சி பூட்டிய வண்டிச்,
சக்கரச் சுழற்சியின் சரித்திரம் என்ன
ஆயிற்று அவர்கள் அர்த்தால் இருபதில்?
பதவி ஆசை படிந்த மனத்தினரின்
குழப்பக் கூச்சல்! கூட்டு பேரம்!
பதவி நாற்காலி பறித்திட திட்டம்
போட்டுப் பார்த்தனர் ஓட்டை விழுந்தது!

பேசக்கூடாத இடம்—, அவர் - - - - - நீர் குறைந்த குடம்!

தமிழர் மலையாளிகள் தகராறு இங்கே
ஏதேனும் உண்டா? இதுவரை, ஆனால்,
அர்த்தால் கூட்டு அபாய அறிவிப்பை
மூச்சு விடாமல் முழக்குறார் இங்கே?
அர்த்தால் செய்ததே தவறாம்! அதற்கு
அர்த்தமே இல்லையாம்—அமைச்சர் உரைக்கிறார்.
அவரது உளறலை அறிவிக்க,
மாணவர் மன்றந்தான் கிடைத்ததா. அந்தோ!

காவியக் கவிஞர்கள்:

அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பம்!

புகைப்படம், வாழ்க்கை—விளக்கத்துடன்!

முதற்கவிஞர்—கோ. இராதா, கோவை.

இருட்டிலும் - - - உதட்டிலும்

வரிவேங்கைப் புலிதனது வாலைத் தூக்கி,
வாய்திறந்து பாயவரின், அதை விரட்ட,
நெருப்பு முடிப் பந்தத்தை எடுத்துக் காட்ட
நினைக்காமல்; வீரத்தை நிலை நிறுத்த,
'வரட்டும் அது; பார்க்கின்றேன்' என்று கூறி
மங்கையர்கள் எடுக்கின்ற முறமும்; கேணி
உருவுடைய கூடைகளும்; தடுக்கும்; குன்றின்
ஓரத்தில் வசிக்கின்ற குறத்தி எச்சில்!

சுவையுடைய ஆவின்பால்; அந்தப் பாலில்
தூங்குகின்ற தித்திப்பு ஆடை! வெள்ளை
அவரைப்பூ போலுள்ள தயிரின் கட்டி;
ஆண்யானைக் கால் நகத்தைப் போல் திரண்டு
சுவைகாட்டி, வலுவூட்டும் வெண்ணெய்க் கட்டி;
சொற்ப விலை போகும் மோர்; அனைத்தும்—வாயை
அவிழ்க்கின்ற முல்லைப்பூ தன்னைச் சூடி
அலங்காரம் செய்கின்ற இடைச்சி எச்சில்!

சேல்விழியால், காதலரை இழுத்தடிக்கும்
சிங்கார மங்கையர்கள் உடுத்தும் சேலை;
வேல் எடுத்து, வாள்எடுத்துக், களத்தை நோக்கி
விரைந்தோடும் போர்வீரர் உடுத்தும் ஆடை;
பால்போன்ற பஞ்சாடை; போர்வை; மின்னும்
பட்டாடை, இவையாவும்—அறுந்து போன
நூல்நக்கி, இழைநெருடி பாவில் நூலை
நுழைக்கின்ற சேணியரின் நாக்கு எச்சில்!

சின்னதொரு கொய்யாவை, ஆசையோடு
தின்றுவரும் கிளிபோன்ற தங்கை; பச்சை
புன்னை தரும் வெண்மலர்போல் சிரிப்புக் காட்டி;
பூவிழியால் புது அழகு அளிக்கும் அக்கை;
அன்புள்ள சிறுதம்பி; குடும்பந் தன்னை
ஆதரித்து வரும் அண்ணன்—இவர்கள் எல்லாம்
இன்பமுடன் மஞ்சத்தில் கொஞ்சிக் கொஞ்சி
இருட்டுதனில் பெற்றோர்கள் செய்த எச்சில்!

ஓடிவரும் நதிநீரைக் கடன்கேளாமல்
ஊற்றுக்கண் திறக்கின்ற கிணறும், பள்ளக்
கோடுகளில் ஓடுகின்ற ஆறும்; பெண்கள்
குளிக்கின்ற ஊர்க்குளமும்; சுனையும்; வெள்ளை
ஆடையைப்போல், கீழ்நோக்கும் புகைபோல்—உள்ள
அருவிகளும், அலையாடும் ஏரி நீரும்
தோடணிந்த மங்கையர்கள்; கொம்பு மான்கள்;
துள்ளுகின்ற மச்சங்கள், செய்யும் எச்சில்!

கருவினிலே மாந்தரெல்லாம் உருவ மாகிக்
காட்சிதரும் உலகத்தில்; தாங்கள் மட்டும்,
பிரம்மாவின் நெற்றியிலே பிறந்ததாகப்
பிதற்றுகின்ற பார்ப்பனரும்; சாம்பல் பூசிப்,
பரம்—அபரம் எனப்பேசிக் காலந் தன்னைப்
பாழாக்கும் சைவர்களும்—சுட்டுத் தின்று
வருகின்ற கிழங்குண்டே, அக்கி முங்கை
வளர்க்கின்ற பனங்கொட்டைப் பலபேர் எச்சில்!

எச்சில் பலவு முளமற் றவற்றுள்
இயக்க மிரண்டு மிணைவிழைச்சு, வாயில்
விழைச்சிவை எச்சிலிந் நான்கு....
நால்வகை யெச்சிலும் நன்கு கடைப்பிடித்
தோதா ருரையார் வளராரே யெஞ்ஞான்றும்
மேதைக ளாகுறு வார்.

—ஆசாரக்கோவை.

கோவை இதழ்— — —கொடுத்துவிட்டேன்!

சேலை அசைய; நிழல் அசைய—இரு
செவ்வாழைத்தண்டு தொடை அசைய—முத்து
மாலை அசைய; வளை அசைய—ரச
மாம்பழக் கன்னத்தின் மேடசைய—நெய்யும்
நூலிடை பூங்கொடி போலசைய—நெஞ்சில்
நூதன எண்ணங்கள் நின்றசைய—இரு
காலில் படிந்த சிலம் பசைய—கடல்
கண்ணசைய; வஞ்சி வீடுவந்தாள்.

"மந்திரமாவது நீறு" என்னும்—தே
வாரப்பதிகத்தைப் பாடிக் கொண்டே—அங்கு
வந்தஇளைஞனைக் கண்ட உடன்—'அத்தான்
வா' என்று வஞ்சி அழைக்க லுற்றாள்—"அடி
இந்தா கொடிமுல்லை. சூடிக்கொண்டு—என்னை
எச்சில் படுத்துஉன் முத்தத்தினால்!"—என்று,
சந்தனம் வீட்டில் இருக்கையிலே—வெந்த
சாம்பலைப் பூசுவோன் கெஞ்சி நின்றான்.

பெய்யும் மழைபோல் உதவி செயும்—மங்கை
பேசாதிருந்திட; மீண்டும் அவன்—"துயர்
செய்யுது காதல் பருவம் என்னை;—மனம்
தொல்லை கொடுக்குது ராத்திரியில்!—அடி,
வெய்யில் அடிக்கையி லேஉதவா—குடை
வீட்டில் இருந்துதான் என்னபயன்?—நான்
கொய்யும் கனிதனை எத்தனைநாள்—வீட்டுக்
கொம்பில்இருக்க விடுவ"தென்றான்.

"ஆவணி மாதத்தில் உன் கழுத்தில்—மஞ்சள்
ஆவாரம் பூத்தாலி கட்டுகின்றேன்—பின்பு
கோவில்குளம எங்கும் போய்வரலாம்—இன்று
கொஞ்சம் பசியைத் தணித்திடடி!—பச்சை
மாவிலை போன்ற பசுங்கிளியே!—வைர
மாலை தரும் அழகின் ஒளியே!—எந்தன்
காவிச் சிவப்பு உதட்டினிலே—கட்டிக்
கற்கண்டு ஒற்றடம் தந்திடடி"

முத்தன் இதுபோல் மொழிந்திடவே—"வஞ்சி
முல்லை வரிசை திறந்தபடி—இங்கு
எத்தனை மரங்கள் நிற்கின்றன?—இதை
எண்ணிச்-சரியாகச் சொல்லு" என்றாள்—அவன்
மொத்தக் கணக்கிட்டு, மூப்ப தென்றான்—வண்டு.
மெய்க்காத அல்லி சிரித்தபடி—"சரி
அத்தோடு உன்னையும் சேர்த்துக் கணக்கு
அளிக்கத் தவறினை, அத்தான்!" என்றாள்.

"அப்படி ஆனால் நான் மாமரமா?"—என்று
ஆத்திரத் தோடவன் கேட்கையிலே—அந்த
செப்புச் சிலை நிகர் சுந்தரியாள்—தன்
சேல் விழியை அவன் மேல் திருப்பி—அத்தான்
இப் படிவா என்றாள். வந்து நின்றான்.—'கல்வி
இல்லைஎனில் மரம் போன்றவனே!—இது
இப்போது நான் சொல்லும் வார்த்தையல்ல—ஔவை
ஏடுகுறிப்பிடும் பட்டப் பெயர்!'

எட்டிப்பழம்போல் அழ கிருந்தும்—கல்வி
இல்லாவிடில், மேன்மை இல்லை அத்தான்—சிறு
சிட்டுக்குருவி புறாஆமோ?—சிலை
செய்திட, செங்கல் உதவிடுமோ?—உயிர்
விட்டுப் பிரிந்தாலும் விட்டுவிடாப்—புகழ்
வேண்டாமோ? கல்விநீ கற்றுவரின்—என்னைத்
தொட்டு சுகிக்கலாம் என்றுரைத்தாள்—அந்தத்
தோகையிடம் விடை பெற்றுச் சென்றான்

சந்திரம் என்னும் நகரடைந்து—அங்கு
சாலியனார் என்னும் ஆசானிடம்—ஒரு
ஐந்து வருடம் தொடர்ந்தபடி—புது
அறிவு புகட்டும் மதுரைத்தமிழ்—கற்று,
நைந்தநினைவு நிறைந் திருந்தோன்—மெச்சும்
நல்லஅறிஞனாய் மாறிவிட்டான்—இதைப்
பைந்தமிழ்க் காதலி கேள்விப்பட்டாள்—அவள்
பாராட்டை, முத்தனும் கேள்விப்பட்டான்.

"ஆட்டுத் தலைபோன்ற கொண்டையிலே—உயிர்
அற்றதுறிஞ்சி மலர் அணிந்து—தமிழ்ப்
பாட்டுப் படித்திடும் பெண் அமுதே!—புதுப்
பச்சைக் குருவியே! பால்நிலவே!—கற்றுக்
கேட்டுத்தெளிந்து புலமை பெற்றேன்—பழக்
கோவை இதழ்தர அட்டியுண்டோ?"—என்று!
தீட்டிய ஓலையை முன்அனுப்பி—கொம்புத்
தேன்முத்தம் வைத்திடப்பின்னேவந்தான்.

சின்ன விழிதனில் விண்ணழகு—காட்டும்
சித்திரமே கல்விப் பத்திரமே!—நீ
என்னை அறிவாளி ஆக்கிவிட்டாய்—நானும்
என் அறி யாமையைப் போக்கிவிட்டேன்—அடி
உன்னை மனமார வாழ்த்துகின்றேன்—நாட்டில்
உள்ளகொடுமையை வீழ்த்து கின்றேன்—இனி,
அன்னந்தண்ணீர் ஏதும் வேண்டாமடி—நீ
அருகில் இருக்கையி லேமயிலே!

வள்ளுவன் என்கின்ற பேரறிஞன்—தந்த
வாழ்க்கை முறைநூல் இருக்கையிலே—நம்மைக்
கொள்ளை அடித்திடும் ஆரியர்கள்—இங்கு
கூறும் மனுநூலைப் போற்றுகின்றோம்—சிறு
எள்ளுப்பூ மூக்கு அமைந்தவளே!—இங்கு
எத்தனையோ மலர் பூத்திருக்க—ஒரு
கள்ளிப்பூ மீதுகை நீட்டுவதோ—உன்
காலைத் தொடுகின்ற கூந்தலுக்கு,

நல்லோர்கள் கூறிய தெய்வத்திற்கு—ஒரு
நாடில்லை; வீடில்லை; ரூபமில்லை;—மக்கள்;
புல்லர் புராணத்தை நம்பியதால்—பாம்புப்
புற்றுகூட கோயில் ஆயிற்றடி—புது
அல்லிமலரே! நமக்கு மணம்—இங்கு
ஆயின பின்னர் உடனடியாய்—கோயில்
இல்லாத ஊரில் குடியிருப்போம்—என்றான்,
இன்பப்பதுமை தலை அசைத்தாள்,

ஓத்தஅழகு உனக் கிருந்தும்—அன்று
ஓதா திருந்தனை; நான் மறுத்தேன்—இன்றோ,
முத்தமிழ் கற்றுத் தெளிவடைந்து—நீ
முன்னேற்ற எண்ணம் படைத்துவிட்டாய்!—கடல்
கத்தும் உலகில்நீ பேரறிஞன்—நான்
கற்றவன் காதலி ஆகிவிட்டேன்!—இதழ்
முத்திரை இட்டு மகிழ்ந்திடுவோம்—என்று
முல்லைக்கொடியாள் உரைக்கலுற்றாள்!

"முல்லைக்கு ஏதடி உன்சிரிப்பு?—கடல்
முத்துக்கு ஏதடி உன்மதிப்பு?—வான
வில்லுக்கு ஏதடி உன் அழகு?—கெண்டை
மீனுக்கு ஏதடி உன் துடிப்பு?—தமிழ்ச்
சொல்லுக்கு தான்உண்டோ உன் இனிமை!—என்று
சொல்லி முடிக்கும் சமயத்திலே—அவன்,
கொல்லி மலைமார்பில் சாய்ந்துவிட்டாள்—அன்னோன்
கொஞ்சத் தொடங்கினன் வஞ்சிதனை.

சத்துள்ள கன்னத்தில் முத்தமிட்டான்—புறா
சத்தமிடுதல் போல் சத்தமிட்டாள்—மார்பில்
முத்து வடங்கள் அழுந்து தென்றாள்—கிளி
மூக்குநகம் காயம் செய்யுதென்றான்—சோழன்
கத்தி வெளிச்சத்தைப் போலிருக்கும்—அவள்
கண்ணின் வெளிச்சத்தைப் பார்த்தபடி—பெண்ணே!
கொத்தி வருத்திடும் காதல்பசி—மட்டும்
கூட்டு முறையில்தான் தீருமென்றான்.

நீரோடை பக்கம்நாம் செல்வோமென்றான்—அவள்,
நீண்டதன் மேலுடையை விரித்தாள்!—இந்த
ஊரேஉறங்குது என்று சொன்னாள்—அவன்,
ஓராயிரமுத்தம் வேண்டு மென்றான்.—அவன்,
கூரானகண்ணை சிவக்க வைத்தாள்—அவள்
கோவை உதட்டை வெளுக்க வைத்தான்—நோய்
தீராத சந்திரன் தொங்கையிலே—நோய்
தீர்த்தனர், தூங்கினர், தோட்டத்திலே!

★

கவிதைகள் சந்திக்கின்றன !

எந்த நாளோ ?

மங்கைமார் பலபேர்கள் சூழ்ந்து வாழ
மாதரசி எனத்திகழ்ந்த மகிமை அன்று
தங்கத்தின் நிறமொத்த நங்காய் ! இன்று
தாழ்வுற்றுக் கிடக்கின்றாய் தமிழர் காண
பங்கயங்கள் பஞ்சடியை வாழ்த்தி நிற்கப்
பவனிவந்த தன்மையையான் பகர்தல் நன்றோ ?
தங்கையினைத் தகர்த்தேநீ மங்கா வாழ்வைச்
சகமதனிற் பெற்றிடும் நாள் எந்த நாளோ ?

சங்கமெனும் பேரவையில் உயர்வைப் பெற்று
சகம்வாழத் தமிழமுதம் தந்து வாழ்ந்தாய் ;
எங்களினம் உள்ளங்கள் ஊடோ வந்து
ஏற்றிட்டாய் விழிப்புணர்ச்சி எழுச்சி காண
மங்கையேநீ ! மாண்புறுநற் றமிழைப் பாடி
நங்கையரின் நாயகியாய்த் திகழக் கண்டு
பங்கையநல் லெங்காங்கள் பரவி நிற்கப்
பார்மீதிற் பார்க்கும்நாள் எந்த நாளோ ?

—ஆலி வளவன் - புலவர் வகுப்பு.
சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி பேரூர்.

★

குற்றம் சாட்டுகிறேன் !

குற்றம் சாட்டுகிறேன்
குறுமுனியே உன்மீது !
மற்றொருன் நிழித்துரையேன்
மறத்தமிழன் என்பதனால் !
நற்றேன் தமிழ்நாடு
நல்லுரிமை இழக்கையிலே
என்செய்தாய் அகத்தியனே ?
என் செய்தாய் ?
வளமைத் தமிழ்நாடு
வாழ்விழந்து போகையிலே,
அளவில் உயர்நூல்கள்
ஆழ்கடலில் மூழ்கையிலே,
இளமைக் குமரியன்னை
இருட்சிறையில் வாடையிலே !
எங்குற்றாய் அகத்தியனே ?
எங்குற்றாய் ?
பின்னே பிறந்தமொழி
பேரரசு செய்கையிலே
முன்னைத் தமிழ்மொழியோ
முடங்கிக் கிடக்கயெந்தன்
அன்னை அரசிழந்து
அல்லுற்ற வேளையிலே
என்செய்தாய் அகத்தியனே ?
என் செய்தாய்
தீந்தமிழ்க்குத் தீங்கிழைக்கும்
தீயோரைக் கழுவேற்றி,
நந்தமிழர் என்றுசொல
நாணுகின்றோர் நாவறுத்து
எந்தமிழ் அன்னைதன்
ஈரடிக்குப் படைக்காது
எங்ககன்றாய் அகத்தியனே ?
எங்ககன்றாய் ?

—"வில்லவன் கோதை"

காவியம் கனிந்து வாழ்க!

ஓவியமும் சிற்பமும் ஒண்கலைகள் பற்பலவும்
காவியத் தோடுயரும் கன்னித் தமிழ்நாட்டில்
சாவா மருந்தன்ன நற்கவிதை கொண்டுயரும்
காவியம் வாழ்க கனிந்து.

மக்கள் பிணிபோக்கி மாண்பொருள்கள் சீர்தூக்கி
எக்காலும் நன்னிலவாய் இன்பம் தினம்கொடுக்கும்
மக்கள் உயிர்த்தோழி-மாநிலத்தின் பேரரசி
எக்காலும் வாழ்க இனிது.

—அ. செல்லம்மாள், திருச்சி.

★

அவள் !

அல்லிமலர் வாய்ச்சிரிப்பை மலர வைத்து
அன்னத்தைப் போல்நடந்து அருகே வந்து
அன்புக்கு உரியவரே ! என்று கூறி,
அதரங்கள் தந்திடுவாள் ஒவ்வோர் நாளும் !
உயிருக்கு நிகராக நேசிக் கின்றேன்,
உரிமைமிகக் கொண்டுஎனை நேசிக் கின்றாள்.
உமக்காக வேநானும் வாழு கின்றேன்,
உமையன்றி யாருமில்லை எனக்கென் கின்றாள்.

ஷாஜகான்-இராசிபுரம்,

★

வெண்ணிலவு !

அறிவுதனை ஆண்மையினை அடகு வைத்து
அவனியிலே அறியாமை இருளில் சிக்கி
அவதியுறும் அருந்தோழர் தன்னை மீட்க
அன்றாடும் ஐந்தாறு மேடை யேறி
அறிவுமொழி புகன்றுவரும் அண்ணா வைப்போல்
அவர்தம்மை ஆக்குவித்த அய்யா வைப்போல்
அரும்பியது வெண்ணிலவு அமுத ஊற்றாய்
அடடாபார் வானத்தில் வெள்ளி வட்டம் !

—அண்ணாதாசன், நள்ளிபாளையம்.

★

வாழ்வின் கதை !

செல்லச் சிறுநகை சேயிழைச் சிறுமியர்
சிற்றில் சிதைப்பதுவும்—தாவும்
கிள்ளைக் குலமெனும் பிள்ளைக ளோடுடன்
கூடிக் குலவுவதும்
செல்லச் சிறுக சென்று மறைந்திட
சிறியோர் பெரியோராய்—வளர்
பிள்ளைப் பருவம் மெல்லக் கழிந்திட
பேதை பெதும்பையராய்
அள்ளிச் சொருகிடும் வாச மலரிதழ்
ஆடக் கூந்தலிலே—உயிர்
கிள்ளி எடுத்திடும் வாயிதழ்ப் புன்னகை
மின்னும் பொலிவோடு
கள்ளவிழ் நறுமலர் கானக் கொடியென
காட்சி தந்திடவே—அவர்
கொள்ளை வனப்பினல் கூடிக் களித்திட
குமரர் உறவாக
கல்விக்கழ காமெனுங் கற்பில் காதல்
வாழ்வு நடத்துவதும்—தறும்
முல்லைக் காடென மொய்க்கும் பல்லிதழ்
முத்தம் பருகுவதும்
இல்லையா மெனில் இல்லை வாழ்வென
எண்ணும் நாள்வழிய—அவர்
கொள்ளை வனப்பும் குமரப் பருவமும்
கழிந்த கனவாகும்
முன்னைப் பழங்கதை மொய்க்கும் நினைவில்
முதுமை திரைசூழ—வரும்
பின்னைப் புதுமை தன்னி லுறவாட
பிள்ளைகள் பலவாகும்
பிஞ்சு காய்கனி ஆகிப் பெருமரம்
வளர்க்கும் வித்தியும்—வித்தில்
எஞ்சிய ஒருமரம் எத்துணை வித்துக்கள்
ஈயும் கனிநல்கும்
பிஞ்சு காய்கனி ஆனகதை பிரபஞ்ச
வாழ்வு மலர்ந்தகதை—பலர்
துஞ்சியும் முடியா நெடிய கதை
இது வாழ்வின் பெரிய கதை !

—'மான்', கோவை.

ஓடிடாதே!

முல்லை பூத்திடும் சோலையிலே - உன்
மோகனப் புன்முறு வல்கண்டேன்
கொல்லை புறத்தி லிருந்தயெனை - நீ
கூப்பிட் டழைக்குங் குரல்கேட்டேன்
துள்ளிக் குதித்திடும் மீனினைப்போல் - என்
தூயகம் குதித்த துனைத்தழுவ
அள்ளியெடுத்து அணையுமுன்னே - நீ
அந்தி யிருட்டில் மறைந்துவிட்டாய்

ஐயோ நானுற்ற அருந்துயரம் - என்
ஆயுளில் என்றும் அடைந்ததில்லை
பையநீ எய்த்தின்பம் பருகினாய் - என்
பார்வை தனிலே விளையாடினாய்
எல்லை யிலாவானப் பரப்பிலே - மீன்
எள்ளிக் கண்சிமிட்டி நகைத்திட
பில்லை நிலாவில் ஒளிந்துகொண்டு - நீ
பின்னும் எனைநோக்கி சிரித்தனை

கண்ணிலே யிருந்து நீர்விழ - என்
கண்ணேயுன் னுருவம் வாட்டிட
அன்ன ஆகாரம் இன்றியே - யான்
அழுதேன் புலம்பி வாடினேன் !
புள்ளினம் கத்தும் காலையிலே - நீ
புன்னகை யோடெனைக் காணவந்தாய்
உள்ளம் புவந்ததென் தெள்ளமுதே - இனி
ஒன்டியாய் விட்டெனை ஓடிடாதே !

—S. பிரகாசம் பரமக்குடி.

★

'மலர்'
இலக்கிய மாத இதழ்
ஆசிரியர் : வே. கபிலன்
5, ஆண்டியப்ப கிராமணித் தெரு,
சென்னை-13.

1—4—'56 இதழில், எழுதுவோர்

வரலாற்று ஆராய்ச்சி :
டாக்டர் ஆரோக்ய சாமி

ஆராய்ச்சிக் கட்டுரை :
டாக்டர், மா. இராசமாணிக்கம்

இலக்கியம் :
க. அன்பழகன்
அ. மு. பரமசிவானந்தம்
ம. ரா. மாணிக்கம்
குறிஞ்சிப் புலவன்

கட்டுரைகள் :
சி. பி. சிற்றரசு
எஸ். டி. சுந்தரம்
ஓ. இரா. கிருட்டினசாமி
அன்புப் பழம் நீ
மாயாண்டி பாரதி

கவிதை :
கவிஞர். வாணிதாசன்

கதைகள் :
வே. கபிலன்
அன்பு கணபதி

நாடகம் :
புலவர். அரசு.

எங்கும்.முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

புள்ளிமான் பதிப்பகம்
அளிக்கும்-கவிதை ஏடுகள் :
சுரதாவின் சொல்லோவியங்கள்

நக்கீரன் அறுபது (புராணப் புரட்டு)	0—4—0
விதவையும் வேதாந்தியும் (வரலாறு)	0—4—0
நெல்லிக்கனி (புறநானூற்று நிகழ்ச்சி)	0—4—0

விவரங்கட்கு :—
புள்ளிமான் பதிப்பகம்,
12, படைவேட்டம்மன் கோயில் தெரு,
ருயப்பேட்டை, சென்னை-12.

ஆசிரியரும் வெளியிடுபவரும்:—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ், 19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-7.